### கடும் போராட்டம்: தொகுதி மறுவரையறை தொடர்பாக – ஒன்றிய அரசுக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளார்!

## “இந்தியன் எக்ஸ்பிரஸ்” இணையதளத்தில் கட்டுரை!

**சென்னை, ஏப். 17-**

**தமிழ்நாடின் இறுதி எச்சரிக்கை’: தென்னிந்திய மாநிலங்கள் பாதிக்கப்பட்டால், தொகுதி மறுவரையறைக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்போம் என ஒன்றிய அரசுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.**

X தளத்தில் வெளியிடப்பட்ட ஒரு காணொளிச் செய்தியில், தொகுதி வரையறை தொடர்பான அரசியலமைப்புத் திருத்தத்தை ஒன்றிய அரசு வலுக்கட்டாயமாக நிறைவேற்ற எண்ணியுள்ளது என தமிழக முதல்வர் தெரிவித்துள்ளார் என்று ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ இணைய தளத்தில் கட்டுரை வெளியாகியுள்ளது.

அது வருமாறு:-

முன்மொழியப்பட்ட தொகுதி மறுவரையறைப் பணி தொடர்பாக ஒன்றிய அரசுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் செவ்வாயன்று கடுமையான எச்சரிக்கை விடுத்தார் . மாநிலத்தின் நலன்கள் பாதிக்கப்பட்டாலோ அல்லது தென்னிந்திய மாநிலங்கள் அளவுக்கு அதிகமாகப் பாதிக்கப்பட்டாலோ, மாநிலம் ஒரு மாபெரும் போராட்டத்தைத் தொடங்கும் என்றும் அவர் கூறினார்.

நாரி சக்தி வந்தன் அதினியம், 2023 இல் திருத்தங்கள் செய்வது குறித்தும், நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதற்கான முன்மொழியப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதா குறித்தும் விவாதிப்பதற்காக, ஏப்ரல் 16ஆம் தேதி தொடங்கவிருக்கும் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தொடருக்கு முன்னதாக அவரது கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

X தளத்தில் வெளியிடப்பட்ட ஒரு காணொளிச் செய்தியில், தொகுதி வரையறை தொடர்பான அரசியலமைப்புத் திருத்தத்தை ஒன்றிய அரசு வலுக்கட்டாயமாக நிறைவேற்ற எண்ணுவதாக ஸ்டாலின் கூறினார். மேலும், சிறப்பு அமர்வின் காலத்தையும் அவர் கேள்விக்குள்ளாக்கினார்.

தேர்தல்கள் நடைபெற்று வரும் வேளையிலும், தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் இந்த சிறப்புக் கூட்டத்தொடர் வலுக்கட்டாயமாகக் கூட்டப்படுகிறது.

“ஆரம்பத்திலிருந்தே நாங்கள் இதற்கு எதிராகத் தொடர்ந்து எச்சரித்து வருகிறோம். மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம். தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும், பாதிக்கப்படக் கூடிய மாநிலங்களின் முதலமைச்சர்களையும், முக்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் ஒன்றிணைத்து, சென்னையில் ஒரு கூட்டு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தை நடத்தினோம்,” என்று அவர் கூறினார்.

ஒன்றிய அரசிடம் கவலைகளைத் தெரிவிக்க கூடுதல் அவகாசம் கோரப்பட்டதாகக் கூறிய ஸ்டாலின், “பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை நேரில் சந்தித்து எங்கள் கவலைகளைத் தெரிவிக்க அவகாசம் கோரினோம். அதுவும் மறுக்கப்பட்டது. தொகுதி மறுவரையறையை அவசரமாக நிறைவேற்றும் இந்த முயற்சி, பாஜக அரசால் ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்படும் அப்பட்டமான தாக்குதலாகும். அதைவிட, இது மாநிலங்களின் உரிமைகள் மீதான நேரடித் தாக்குதலாகும். இந்தத் தொகுதி மறுவரையறைப் பணி எவ்வாறு மேற்கொள்ளப்படப் போகிறது என்பது கூட எங்களுக்குத் தெரியாது,” என்றார்.

ஒன்றிய அரசின் அறிவுறுத்தலின்படி, தமிழகமும் மற்ற தென்னிந்திய மாநிலங்களும் முன்னதாக மக்கள் தொகைக் கட்டுப்பாடு மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றின, ஆனால் தற்போது அதற்கான சாத்தியமான பின்விளைவுகளைச் சந்தித்து வருகின்றன என்று முதலமைச்சர் மேலும் கூறினார்.

தொகுதி மறுவரையறையால் மாநில நலன்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டாலோ அல்லது தென்னிந்திய மாநிலங்கள் அளவுக்கு அதிகமாகப் பாதிக்கப்பட்டாலோ, தமிழகம் சும்மா இருக்காது என்று திமுக தலைவர் எச்சரித்தார்.

“1950கள் மற்றும் 1960களின் தி.மு.க.வின் உணர்வை இந்தியா மீண்டும் காணும். இதை ஓர் அச்சுறுத்தலாகத் தவறாக எண்ண வேண்டாம். இது ஓர் எச்சரிக்கை. நீங்கள் இதை ஓர் அச்சுறுத்தலாகக் கருதினாலும், அது எங்களைப் பாதிக்காது. ஆம், இது தமிழ்நாட்டிலிருந்து விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கை,” என்று அவர் கூறினார்.

மாநில சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, தேர்தல்களும் அதிகாரப் பிரயோகமும் இரண்டாம் பட்சமானவை என்று முதலமைச்சர் கூறினார்.

“நாங்கள் சுயமரியாதையுள்ள மக்கள். எங்களைப் பொறுத்தவரை, கொள்கைகளே முக்கியம். மாநிலங்களின் உரிமைகளே முக்கியம். இவையே பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் எங்களுக்கு விட்டுச்சென்ற உயிருள்ள இலட்சியங்கள். தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்துவிட்டு, வழக்கம் போல் உங்கள் வேலையைத் தொடரலாம் என்று நீங்கள் நினைத்தால், அது தவறு.” என்றார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் பிறந்த நாளை முன்னிட்டு அவரை நினைவு கூர்ந்த ஸ்டாலின், “அரசியலமைப்பின் தந்தை, பாபாசாகேப் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளில், நான் இதை மிகுந்த மரியாதையுடன் கூறுகிறேன்: தமிழ்நாடு பாதிக்கப்பட்டால், ஒட்டுமொத்த தேசத்தையும் நாங்கள் கவனிக்க வைப்போம். பிரதமர் மோடி அவர்களே, மீண்டும் சொல்கிறேன், தமிழ்நாட்டிலிருந்து உங்களுக்கு விடுக்கப்படும் இறுதி எச்சரிக்கை இது. தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்” என்றார்.

### கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியத்தில்

# கழக வேட்பாளர் கு.பிச்சாண்டி வாக்கு சேகரித்தார்!

## கூட்டணி நிர்வாகிகள் உடன் சென்றனர்!

*கீழ்பென்னாத்தூர், ஏப். 17-*

*கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியத்தில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் கு. பிச்சாண்டி சூரியந்தாங்கள், அரும்பாக்கம், அணுக்குமலை, பொன்னமேடு, கல்லாயி, வென்னியந்தல் மற்றும் பிற்பகலில் கீரனூர், வேளானந்தல், செல்லங்குப்பம், கோணலூர், நாடழகானந்தல், நா. கெங்கப்பட்டு, இராஜந்தாங்கள், நெய்வானத்தம் உள்ளிட்ட கிராமங்களில் வீடு தோறும் சென்று பொதுமக்களை சந்தித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.*

*வேட்பாளர் கு.பிச்சாண்டி உரையாற்றுகையில், திராவிட மாடல் ஆட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியுடன் போட்டியிடுவதாக தெரிவித்தார்.*

*அவர் மேலும் கூறுகையில், கடந்த என்னுடைய ஆட்சி காலத்தில் கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியத்தில் பல்வேறு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகள்:*

*கீரனூர் ஊராட்சி பசுங்கரை ஆதிதிராவிடர் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்து தந்துள்ளேன் பசுங்கரை கிராமத்தில் ஆல மரத்தைச்சுற்றி மேடை அமைத்து தந்துள்ளேன்*

*பசுங்கரை ஆதிதிராவிடர் குடியிருப்பில் நிழல் கூடை அமைத்து தந்துள்ளேன் நா.கெங்கப்பட்டு ஊராட்சி மற்றும் ஆதிதிராவிடர் பகுதியில் சிமெண்ட் சாலைகள் அமைத்து தந்துள்ளேன் செல்லங்குப்பம் ஊராட்சியில் சிமெண்ட் சாலை மற்றும் செய்யாலேரியில் பல்நோக்கு கட்டிடம் அமைத்து தந்துள்ளேன் இராஜந்தாங்கள் ஊராட்சியில் சிமெண்ட் சாலை, குடிநீர் பைப் லைன் மற்றும் வாரச்சந்தை மேம்பாடு செய்துள்ளேன் இராஜந்தாங்கள் ஊராட்சியில் கீழ்க்கரிப்பூர் கூட்ரோடு அருகில் நிழல் கூடைகள் அமைத்து தந்துள்ளேன் இலுப்பன் தாங்கல் ஆதிதிராவிடர் பகுதியில் பல்நோக்கு கட்டிடம் அமைத்து தந்துள்ளேன் நாடழகானந்தல் மற்றும் கருங்கல்பட்டு பகுதிகளில் பல்நோக்கு கட்டிடங்கள் அமைத்து தந்துள்ளேன்*

*நெய்வானத்தம் ஊராட்சியில் சிமெண்ட் சாலை மற்றும் ஆதிதிராவிடர் பகுதிகளில் சாலை வசதி ஏற்படுத்தி தந்துள்ளேன் என்றார்.*

*மற்றும் கூடுதல் முக்கிய வளர்ச்சி பணிகள் குறித்து அவர் விளக்கினார்.*

*மேலும், இளைஞர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.*

*“முதல்வர் மு.க.ஸ்டாலின் சொல்வதை செய்வார், செய்வதைச் சொல்வார். அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் இத்தொகுதியில் முழுமையாக கொண்டு வர நான் அயராது பாடுபடுவேன். சட்டசபையில் உங்கள் குரலாக செயல்படுவேன். எந்நேரமும் மக்கள் சந்திக்கக்கூடிய எளிய நபராக இருப்பேன். உங்கள் பொன்னான வாக்குகளை உதயசூரியன் சின்னத்தில் பதிவு செய்யுங்கள்” என அவர் கேட்டுக்கொண்டார்.*

*கலந்து கொண்டவர்கள்:*


*இந்த வாக்கு சேகரிப்பில் கீழ்பென்னாத்தூர் ஒன்றிய செயலாளர்கள் ஆரஞ்சு ஆறுமுகம், வி.பி.அண்ணாமலை, ராமஜெயம், இரா. ராஜேந்திரன், பி.வரதராஜன், பி.இளம்பருதி, ஜி.பிச்சாண்டி, ஜெயபாரதிமணி, ஆர். அன்பழகன், எஸ்.மோசஸ், ஏ.சீதாராமன், ஏ.ஆனந்தன், க.சம்பத், எஸ்.தண்டபாணி, ஜப்பார், சக்சஸ் தாஸ், எஸ். சூர்யா, பொன்னுசாமி, ஏ.தெய்வீகன், து.க.மனோகரன், வே. கோவிந்த், ச.சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வேட்பாளர் கு. பிச்சாண்டிக்காக வாக்கு சேகரித்தனர்.*

*மேலும், கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், இளைஞரணி, மகளிரணி, விவசாய அணி மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு பிரச்சாரத்தை உற்சாகமாக முன்னெடுத்தனர்.*

### சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

# நடிகர் சத்யராஜ் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!




## தலைமைக் கழக அறிவிப்பு!

| நாள் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 18.4.2026 மாலை 4.00 மணி | சென்னை வடக்கு | இராயபுரம் |
| | | பெரம்பூர் |
| | சென்னை கிழக்கு | கொளத்தூர் |
| | | வில்லிவாக்கம் |
| | | திரு.வி.க. நகர் (தனி) |
| | சென்னை மேற்கு | அண்ணா நகர் |
| 19.4.2026 மாலை 4.00 மணி | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| | திருவள்ளூர் கிழக்கு | கும்மிடிப்பூண்டி |
| | திருவள்ளூர் மத்திய | ஆவடி |
| | | பூவிருந்தவல்லி (தனி) |
| | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| | சென்னை தெற்கு | மதுரவாயல் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 16.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



கீழ்பென்னாத்தூர் தெற்கு ஒன்றியத்தின் பல்வேறு இடங்களில் கழக வேட்பாளர் கு.பிச்சாண்டி கூட்டணி கட்சியின் நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் தொகுதி

# வேட்பாளர் எஸ். பாலு தீவிரவாக்குப் பிரச்சாரம்!

## மாற்றுக்கட்சியினர் 80 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்!

நாமக்கல், ஏப். 17-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, குமாரபாளையம் பகுதியில் மாற்றுக்கட்சியிலிருந்து 80 பேர் தி.மு.க.வில் இணைந்தனர்.

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதியில், தி.மு.க. வேட்பாளர் எஸ்.பாலு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி சாலை பகுதியில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது மாற்றுக்கட்சியிலிருந்த 80 பேருக்கு கருப்புசிவப்பு துண்டு அணிவித்து தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார். அவர்கள், தி.மு.க. ஆட்சியின் வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் மக்கள் நலத்திட்டங்களை எடுத்துரைத்து, வேட்பாளர் எஸ்.பாலுவுக்கு ஆதரவு திரட்டினர். மேலும், தி.மு.க. வேட்பாளர் பாலு, பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்து, தன்னை ஆதரித்து வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் குமாரபாளையம் நகர கழகச் செயலாளர்கள் விஜய்கண்ணன், ஞானசேகரன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சீரமைப்பா! சீரழிப்பா!

மக்கள் தொகை மற்றும் வாக்காளர்கள்
எண்ணிக்கையின் அடிப்படையில்

நாடாளுமன்றத் தொகுதிகள்
மறுவரையறை செய்யப்படும்போது
குடும்பக் கட்டுப்பாட்டைப் பின்பற்றி அளவான மக்கள் தொகையைக் கொண்டிருக்கும்
தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கான தொகுதிகளின் எண்ணிக்கை பிரதிநிதித்துவத்தில் மிகப் பெரிய ஆதாய இழப்பே நிச்சயம் உருவாகும்...

இது தேசத்தின் நாட்டத்தையும் அறிவுரையையும் ஏற்று நடந்த மாநிலங்களுக்கான தண்டனையாக அமைந்து விடும்.

மாறாக
“உங்கள் மாநிலத்துக்கான தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட மாட்டாது”

அதேவேளை
மக்கள் தொகை மற்றும் வாக்காளர்கள் எண்ணிக்கையை கூடுதலாகக் கொண்டிருப்பதால் வட மாநிலங்களுக்கான தொகுதிகளின் எண்ணிக்கையைத் தான் அதிகரிக்கப் போகிறோம் என்றாலும்..

அது
நாட்டு நலன் கருதி
தேசத்தின் விருப்பமறிந்து நடந்த மாநிலங்களுக்கு அபராதமாகவும்

அதற்கு மாறாக
நடந்து கொண்ட மாநிலங்களுக்கு
ஊக்குவிப்பாகவும் மாறிவிடும் .

இவை யாவுக்கும்
மேலாக

வரி வருவாயை
வாரிக் கொடுப்பதில் தொடங்கி

நாட்டு நலன் கருதி
தேசத்தின் விருப்பமறிந்து
பின்பற்றியது
வரை

தாய்நாட்டுக்கே வழிகாட்டும் மாநிலமான தமிழகத்தைப் போன்ற மாநிலங்களை திட்டமிட்டுத் தண்டிப்பதாகிவிடும்.

மேலும்

பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காத தமிழகம் போன்ற மாநிலங்களின்
அரசியல் பிரதிநிதித்துவத்தை

திட்டமிட்டுக் குறைக்கும்
யுக்தியாகவே இந்த
“தொகுதி மறுசீரமைப்புகள்”
கவலையோடு
கருதப்படுகிறுது..

ஏற்கனவே
அரசியலால் தங்களுக்கு வசப்படாத காஷ்மீர் போன்ற மாநிலங்களையே பிரித்துச் சிதைத்து யூனியன் பிரதேசங்களாக்கி அவற்றைத் தங்களுக்கு கைப்பொம்மைகளாக்கும் காரியத்தை செய்து ருசித்த பா.ஜ.க. ஆட்சி...

அடுத்ததாக
ஜனநாயகத்தின் ஆணி வேரையே பிடுங்கி எறியும் வகையில் “வாக்காளர் தான் ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்” என்னும் உலக நடைமுறைக்கு மாறாக எங்கள் ஆட்சியைத் தேர்ந்தெடுப்பவர்களை மட்டுமே நாங்கள் வாக்காளர்களாக நியமிப்போம்” என்னும் வகையிலான “SIR”சூழ்ச்சிகளைக் களப்படுத்தி

பிற்பட்டுக் கிடக்கும் பீகார் போன்ற மாநிலங்களை தங்களது கொட்டடிக்குள் கொண்டு வந்திருக்கும் நிலையில்

அதன் அடுத்த கட்ட வெறியாட்டப் பரவலாக்கமே இந்த நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை என்பதாகவே தோன்றுகிறது...

மேலும் இதுபோன்ற தொகுதி மறுவரையறையை நடத்தி விட்டால் பா.ஜ.க.வுக்கு வாய்ப்பளிக்காத தென் மாநிலங்களின் எம்.பி.க்கள்
தயவு இல்லாமலே மக்களவையிலும் மாநிலங்களவையிலும் தாங்கள் விரும்புகிற இரும்புச் சட்டங்களை விருப்பம் போல் நிறைவேற்றிக் கொண்டு ஜனநாயகத்தையே சீரழித்து முழுமையான அதிபர் ஆட்சி முறைக்கு நாட்டை மூழ்கடிக்கவும்

“ஒரே நாடு ஒரே தேர்தல் என்னும் அடுத்த சர்வாதிகார இலக்கை நோக்கி நகர்த்தவும் பா.ஜ.க. திட்டமிடுகிறது..

இவை அனைத்துக்கும் மேலாக மறுவரையறை என்கிற இந்தச் சீரமைப்பின் மூலம் மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை சுமார் 850 என்றாகும் நிலையில் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் உறுப்பினர்களுக்கான பேசும் வாய்ப்பு தொடங்கி அவர்களின் ஜனநாயகப் பங்களிப்பு என்பது வெறும் கொலுமாடத்தில் அமர்த்தப்படும் காட்சிப் பொம்மைகளாக்கப்படும் என்பதும் நிச்சயம்..

எனவே இந்த தொகுதி மறுசீரமைப்பு என்கிற திட்டமிட்ட சூழ்ச்சியை ஜனநாயக சக்திகளைத் திரட்டி எதிர்த்துத் தடுக்க வேண்டியது ஒவ்வொருவரது கடமையாகும்..

அதனைத்தான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் விழிப்போடு முன்னெடுக்கிறார்..

ஆம்..

அன்று
நேருவுக்கு சமூக நீதிப் பாடமெடுத்தார் தந்தை பெரியார்..


ராஜகோபாலாச்சாரிக்கு மக்களாட்சியின் உன்னதம் ஊட்டினார் பேரறிஞர் அண்ணா...

வாஜ்பாயிக்கு மதநல்லிணக்கத்திற்குப் பாடம் எடுத்தார் கலைஞர்..


இன்று மாநில சுயாட்சி ஜனநாயக மாண்பு குறித்து மோடிக்கு புத்தி புகட்டப் புறப்படுகிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்றால்...

இந்தியாவின் நெறிசார்ந்த அரசியலைத் தற்காத்து வடிவமைப்பது எப்போதும் அது தென்திசையாகவே இருக்கிறது என்பது உண்மை தானே...

**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*



கழக மாற்றுத்திறனாளிகள் அணியின் தொடர் தேர்தல் பரப்புரையில் – நெல்லை சட்டமன்றத் தொகுதியின் வெற்றி வேட்பாளர் சுப்ரமணியனுக்கு சுத்தமல்லி பகுதியில் கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் செயலாளர் பேராசிரியர் தீபக்நாதன் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்த போது எடுத்த படம். கழக முன்னணியினர் உடன் உள்ளனர்.